# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம்

---

*[1990 மார்ச் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990, மார்ச் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 — தபாற் செலவு : ரூபா 1.[illegible]

# 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம்

[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஒ 63/89

## ஈட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :— — 89 ஆம் அத்தியாயத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" தீர்வை நிறைவேற்றுகையில் ஆதனம் விற்கப்படுவதற்கு ஏதுவாதல்.

46. இப்பிரிவு நடைமுறைக்கு வந்ததன் பின்னர் உருவாக்கப்பட்ட காணியின் ஏதேனும் ஈட்டின்மீதான அடைமான வழக்கெதிலுமான தீர்வை எதுவும் அத்துடன் அத்தகைய ஏதேனும் ஈட்டின்மீது வருமதியான எவையேனும் பணங்களை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கிலான தீர்வை எதுவும் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தவிர்ந்த எத்தன்மைத்தான ஆதனம் எதனையும், ஆதனத்தின் கீழ் வருமதியாகவுள்ளதெனக் காணப்படும் எவையேனும் பணங்களை அறவிடுவதற்காக விற்கப்படவேண்டுமெனக் கட்டளையிடுதலாகாது ; அத்துடன் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தவிர்ந்த எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் அத்தகைய ஏதேனும் தீர்வையை நிறைவேற்றுகையில் விற்கப்படுதலோ விற்கப்படுவதற்கு ஏதுவாதலோ ஆகாது.

இப்பிரிவில் "ஈடொன்றின் மேல் வருமதியான பணங்களை அறவிடுவதற்கான வழக்கு" என்பது வழக்கிற்கான காரணமானது ஈட்டின் காரணமாக எழுவதாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக எழுவதாயினுஞ் சரி ஈடொன்றின் மூலம் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட ஏதேனும் கடனை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கை உள்ளடக்கும்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 47அ எனும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :— — முதன்மைச் சட்டவாக்கத்தில் 47அ எனும் பிரிவை உட்புகுத்தல்.

"ஈட்டுமுறியை நிறைவேற்றுகையில் வேறொரு சாதனத்தை நிறைவேற்றுவதன் பயன்.

47அ. (1) எக்கடன் ஒன்றின் கொடுப்பனவின் முதல், ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதோ, அக்கொடுப்பனவுக்காக கடன்வழங்கு நிறுவனம் ஒன்றின் சார்பில் ஈட்டுமுறி ஒன்றை நிறைவேற்றும் நோக்கில் ஈடுவைப்பவர் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதும் முறியை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசுகளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் முறிக்கான சாட்சிகளைக் கொண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான தனிவேறானதொரு சாதனத்தை நிறைவேற்றுகின்ற விடத்து :—

(அ) ஈடுவைப்பவர் 46 ஆம் பிரிவின் நலனை துறக்கின்றார் எனவும் அவ்வாறு துறப்பதன் பயனை நொத்தாரிசுவினால் அவருக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளதெனவும் அவரினால் செய்யப்படும் ஒரு சிறப்பு வெளிப்படுத்துகை ; அத்துடன்

(ஆ) அத்தகைய துறத்தலின் பயனை ஈடுவைப்பவருக்குத் தாம் விளங்கப்படுத்தியுள்ளார் என்னும் பொருள்பட நொத்தாரிசுவினால் கையொப்பமிடப்பட்ட புறக் குறிப்பொன்று,

அப்போது ஈடுவைக்கப்பட்ட ஆதனத்துடன் மேலதிகமாக ஈடுவைத்தவருக்குச் சொந்தமான வேறு ஏதேனும் ஆதனம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக ஈட்டின் மீதான வழக்கொன்றிலான தீர்வையின்கீழ் விற்கப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுவதற்கும் விற்கப்படுவதற்கும் ஏதுவாதல் வேண்டும் என்பதுடன், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 218 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய வேறு ஆதனத்தின் கைப்பற்றுதலுக்கு அத்துடன் விற்பனைக்கு, ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், ஈடுவைக்கப்பட்ட ஆதனமானது விற்கப்பட்டு அதன் விற்ற வரும்படிகள் தீர்வையைத் திருப்தி செய்வதற்கு பிரயோகிக்கப்படும் வரை ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தவிர்த்த ஈடுவைப்பவரின் ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றுதலுக்கும் விற்றலுக்கும் மன்றானை எதுவும் வழங்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தனி வேறொரு சாதனம் எவரேனும் ஈடுவைப்பவரால் நிறைவேற்றப்பட வேண்டியவிடத்து, 46 ஆம் பிரிவின் நலனை துறந்து விடுவதற்கு சாதனம் ஏற்பாடு செய்கின்றதெனவும் அத்தகைய துறத்தலின் பயன் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தோடு மேலதிகமாக ஈடுவைப்பவருக்கு சொந்தமான வேறு ஆதனம் ஈட்டின் மீதான வழக்கொன்றிலான தீர்வையை நிறைவேற்றுகையில் விற்பனை செய்யப்படுவதற்கு ஏதுவாகும் என்பதேயாகும் எனவும் ஈடுவைத்தவருக்கு விளங்கப்படுத்துவது நொத்தாரிசுவின் கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேலதிக சாதனத்தின் மீது முத்திரைத் தீர்வை எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

(5) கடன் வழங்கு நிறுவனமொன்றின் அலுவல ரொருவரால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 69 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனமொன்றின் மூலம் ஈடானது உருவாக்கப்பட்டுள்ளவிடத்து, அப்போது இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் (3) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, அவ்வேற்பாடுகளில் ஈட்டு முறியை அத்தாட்சிப்படுத்துகின்ற நொத்தாரிசு பற்றிய குறிப்பீடு எதுவும் அத்தகைய அலுவலர் பற்றிய குறிப்பீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் உள்ள எதுவும் இப்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஈடொன்றின் மீதான வழக்கெதற்கும் ஏற்புடையதாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக "கடன் வழங்கு நிறுவனம்" என்பது—

'(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்று என்று ;

(ஆ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்று ;

(இ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி என்று ;

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று ; அத்துடன்

(உ) 165 ஆம் அத்தியாயமான இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்று,

பொருள்படும்.'

முதன்மைச் சட்டவாக்கத்தின் II அ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்தல்.

4. 62 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் IIஅ ஆகப் பயனுறுதலும் வேண்டும்:—

'பாகம் IIஅ

அசைவற்ற ஆதனத்தின் நீதிமன்றக் கட்டளையிலாக் கைப்பற்றல் நிறைவேற்றுகை தத்துவமளிக்கப்படுமிடத்து அறவிடுகைக்கான சிறப்பேற்பாடுகள்

இப்பாகத்தின் ஏற்பாடுகள் குறித்த சில வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுடன் மேலதிகமானவையாக இருத்தல்.

62அ. தவணை தவறும் பட்சத்தில் குறித்த சில வங்கிகளாலும் வேறு நிறுவனங்களாலும், அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பின்மீது வழங்கப்பட்ட கடன்களை அறவிடும் நோக்கத்திற்காக, நீதிமன்றக் கட்டளையிலாக் கைப்பற்றல் நிறைவேற்றுகைக்கான தத்துவத்தைப் பிரயோகிப்பதனை அவற்றிற்குத் தத்துவமளிக்கும் எவையேனும் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமன்றி மதிப்புக் குறைப்பனவாக இருத்தலாகாது.

உடைமை.

62ஆ. (1) வங்கி அல்லது நிறுவனமொன்று, ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தினுள் நுழைவதற்கு அல்லது அதனை அத்துடன் முகாமை செய்வதற்கும் ஆளொவருக்கும் அதிகாரமளிப்பதற்குத் தத்துவமளிக்கப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய ஆள், முனையப்பட்டுள்ளதான அல்லது முனையப்படக்கூடியதான ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது தடை இருக்கின்றமை காரணமாக, அந்தக் காணியை உடைமையில் எடுத்துக் கொள்ள இயலாதவராக இருக்குமிடத்து அல்லது இயலாதவராக இருப்பாரென்று அஞ்சுகின்றவிடத்தும் அத்தகைய அலுவலரானவர், எந்த இடத்தில் அந்தக் காணி அமைந்திருக்கின்றதோ அந்த இடத்தின் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் நீதிவான் நீதிமன்றத்திற்கு, அதன்சார்பில் விண்ணப்பமொன்றைச் செய்ததன்மேல், அந்தக் காணியின் உடைமையை அவருக்கு ஒப்படைப்பதற்காக பிசுக்காலேப் பணிக்கின்றதான, அந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றமொன்றினால், (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று பிசுக்காலுக்கு வழங்கப்படுமிடத்து, அவர் அத்தகைய கட்டளையை உடனடியாக நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், கட்டளை நிறைவேற்றப்பட்ட விதம்பற்றி அந்த நீதிமன்றத்திற்கு எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பிசுக்கால் அல்லது அவரின் பணிப்பின்கீழ் செயலாற்றும் எவரேனும் ஆள், எந்தக் காணியை அந்தக் கட்டளை தொடர்புறுத்துகின்றதோ அந்தக் காணியுள் நுழைவதற்கும், அந்தக் காணியை இருப்பாட்சி செய்கின்றவரான ஆளெவரையும் வெளியேற்றுவதற்கும் அத்துடன் வங்கிக்காக அல்லது நிறுவனத்திற்காக அல்லது வங்கியின் அல்லது நிறுவனத்தின் சார்பில் அந்தக் காணியை உடைமையில் எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரான அலுவலருக்கு அந்தக் காணியின் உடைமையை ஒப்படைப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

62இ. ஈடுவைக்கப்பட்ட காணியைப் பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்து, அத்துடன் கொள்வனவுக்காரரிடம் விற்பனைச் சான்றிதழொன்றை ஒப்படைத்தபின்னர், கொள்வனவுக்காரர் அதனைப் பயனுறு உடைமையாக எடுத்துக்கொள்ள முடியாதவிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது எந்த இடத்தில் ஆதனம் அமைந்திருக்கின்றதோ அந்த இடத்தில் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்த விண்ணப்பத்தின்மீதும் விற்பனைச் சான்றிதழைக் காண்பித்ததன்மீதும் காணியின் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும். குறித்த சில சந்தர்ப்பங்களில் உடைமையை ஒப்படைத்தல்.

62ஈ. பிரிவு 62இ என்பதன்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுருக்கமுறை நடவடிக்கை வாயிலாகச் செய்யப்பட்டு அத்துடன் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் நோக்கத்திற்காகக் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்கள் மீதும் அதன்மீது நடாத்தப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகள் மீதுமான முத்திரைத் தீர்வைகளும் ஏனைய விதிப்பனவுகளும், அத்தகைய விண்ணப்பமானது தொடர்புறுத்துகின்றதான ஆதனத்தைப் போன்ற அதே பெறுமானமுடைய ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கென மாவட்ட நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட தீர்வையொன்றை நிறைவேற்றுவதற்காகவும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான வழக்கு நடவடிக்கைகளுக்காகவும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அந்த வீதங்களிற் செலுத்தப்படுதல் வேண்டும். குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திற்கிணங்க விண்ணப்பம் இடுதல் வேண்டும்.

கடனாளியின் தனிவேறான உரித் தொன்றைக் கொண்டிருக்கும் ஆளொருவரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

62உ. ஈடுபெறுநருக்கு விற்பனைசெய்யத் தத்துவமளிக்கின்ற சட்டத்தைப் பின்பற்றி ஏதேனும் அசைவற்ற ஆதனமானது, கடனாளியின் தனிவேறான உரித்தொன்றின்கீழ் அல்லது ஈட்டுக்கு முன்பு, முறையாக நிறைவேற்றப்பட்டு, முறையாகப் பதிவுசெய்யப்பட்ட சாதனமொன்றின்மூலம் ஈட்டுக்குமுன்பு, கடனாளியால் உருவாக்கப்பட்ட உரித்தொன்றின்கீழ், ஆளொருவரின் உடைமையில் அல்லது இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து, அத்தகைய முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் கொள்வனவுகாரர், அத்தகைய அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைத்தற்கான கட்டளையொன்றிற்கு உரித்துடையவராகார்.

ஆதனத்தின் ஈட்டைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட உரித்தைக் கொண்ட கடனாளி ஒருவரின் உரிமைகள்.

62ஊ. முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம், வங்கிக்கு அல்லது நிறுவனத்திற்கு அவ்வாதனம் ஈடுவைக்கப்பட்டதைத்தொடர்ந்து கடனாளியின் அல்லது அவரது சார்பில் வேறெவரேனும் ஆளின், அல்லது கடனாளியால் உருவாக்கப்பட்ட உரித்தொன்றின்கீழ் உரிமை கோரும் வேறோர் ஆளின் இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து, மாவட்ட நீதிமன்றமானது கொள்வனவுகாரரை அல்லது அவரது சார்பில் உடைமையைப் பெறுவதற்கென அவர் நியமிக்கக்கூடிய வேறெவரேனும் ஆளை ஆதனத்தின் உடைமையில் வைப்பதன்மூலம் ஒப்படைப்பைச் செய்யுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

விற்கப்பட்ட அசைவற்ற ஆதனம் வாடகைக் குடியிருப்பாளரின் அல்லது அத்தகைய ஆதனத்துக் குரித்துடைய வேறு ஆட்களின் இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து.

62எ. (1) ஈடு பெறுநருக்குத் தத்துவமளிக்கும் சட்டத்தினைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஈடு நிறைவேற்றப்பட்ட தேதிக்குமுன்னர் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பயனைக் கொண்டு அதனை இருப்பாட்சி செய்வதற்கு உரித்துடைய வாடகைக் குடியிருப்பாளர் ஒருவரின் அல்லது வேறு ஆளின் இருப்பாட்சியில் இருக்கின்றவிடத்து ஆனால் அச்செயற்கோவை முறையாகப் பதிவுசெய்யப்படாதவிடத்துப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) (1) ஈடு பெறுநர் அவ்வாடகைக் குடியிருப்பாளருக்கு அல்லது இருப்பாட்சியிலுள்ள ஆளுக்கு, காணியின் பெயர், மூறி பதிவு செய்யப்பட்ட தொகுதியும் பக்கமும் என்பன பற்றிய பூரண விபரங்களுடன் தமது சார்பில் ஈடு நிறைவேற்றப்பட்டமை பற்றிய அறிவித்தலை அது நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்துக்குள்ளாகக் கொடுத்திருந்து அவ்வாடகைக் குடியிருப்பாளர் அல்லது இருப்பாட்சியிலுள்ள வேறு ஆள்

அத்தகைய அறிவித்தலைப் பெற்ற ஒரு மாத காலத்துக்குள்ளாக அறிவித்தலைப் போன்ற அதே தொகுதியிலும் பக்கத்திலும் இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் தரப்பட்ட பொருளளவின் 6 ஆம் இலக்கப் படிவத்திலான ஆவணம் ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் தவறினால், அப்போது நீதிமன்றமானது கொள்வனகாரரை அல்லது அவரது சார்பில் உடைமையைப் பெறுவதற்கு அவர் நியமிக்கக்கூடிய வேறு எவரேனும் ஆளை உடைமையில் வைப்பதன்மூலம் உடைமையை ஒப்படைக்குமாறு கட்டளையாக்குதல் வேண்டும்.

(ii) பந்தி (அ) என்பதன்கீழ் கொள்வனகளுள் அல்லது வேறு ஆள் உடைமையில் வைக்கப்பட்டதன்விளைவாக இருப்பாட்சியில் உள்ள வாடகைக் குடியிருப்பாளர் அல்லது ஆள் உடைமையை இழந்துள்ளவிடத்து, வாடகைக் குடியிருப்பாண்மை அல்லது இருப்பாண்மைக் காலப்பகுதியைக் கருத்திற்கொண்டு நியாயமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு கட்டளையிடப்பட்ட நட்டஈடு கொள்வனக்காரர் உடைமையைப் பெற்றதன்பின்னர் மாத்திரம் வாடகைக் குடியிருப்பாளருக்கு அல்லது உடைமையில் உள்ள ஆளுக்கு கொள்வனகாரரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) (1) ஈடு பெறுநர், வாடகைக் குடியிருப்பாளர் அல்லது இருப்பாட்சி கொள்பவருக்கு அவர் சார்பாக ஈட்டை நிறைவேற்றுவதற்கான அறிவித்தலை, காணியின் பெயர் மற்றும் முறி பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதி, பக்கம் பற்றிய முழு விபரங்களுடன் அது நிறைவேற்றப்பட்டு ஒரு மாதகாலத்திற்குள் கொடுப்பதுடன், வாடகைக் குடியிருப்பாளர் அல்லது வேறு இருப்பாட்சி கொள்பவர் அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அதே தொகுதி மற்றும் பக்கத்தில் இச்சட்டத்தின்கீழ் 1 ஆம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட 6 ஆம் இலக்கப் படிவத்தில்

பொருளாளரில் உள்ள ஆவணம் ஒன்றை அவரால் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் முறையாகப் பதிவுசெய்து கொள்வதுடன், இந் நிகழ்வை ஈடு பெறுநருக்கு உடனடியாக எழுத்துமூலமாக அறிவிப்பாராயின்; மாவட்ட நீதிமன்றமானது காணியின் துலாம்பரமான இடத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் விற்பனை நடைபெறும் என்பதற்கான அறிவித்தலை ஒட்டுதல் மூலமும் அத்துடன் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் வசதியான ஓர் இடத்தில் கடனுளியின் அக்கறைகள் கொள்வனவுக்காரருக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளதாக வாடகைக் குடியிருப்பாளருக்கும், அல்லது இருப்பாட்சியாளருக்கு பிரகடனப்படுத்தல் மூலமும் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும். அத்தகைய பிரகடனத்தின் செலவு நீதிமன்றத்தால் குறிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கொள்வனவுக்காரரால் மீளச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) வாடகைக் குடியிருப்பாளர் அல்லது குடியிருப்பதற்கு உரித்துடைய ஆள் அவரது வாடகைக் குடியிருப்பு உரிமைகள் அல்லது இருப்பாட்சி கொள்வதற்கான உரிமைக்குப் பதிலாக ஒரு பணத் தொகையை நட்டஈடாக ஏற்றுக்கொள்வதற்குச் சம்மதிப்பாராயின், நீதிமன்றமானது கொள்வனவுக்காரரால் நீதிமன்றத்தில் அத்தகைய நட்டஈடு வைப்புச் செய்யப்பட்டபின்பு மட்டுமே, எந்தக் கொள்வனவுக்காரரை அல்லது எவரேனும் ஆளை அவர் சார்பாக உடைமையை பெறுவதற்கு நியமிக்கலாமோ, அந்தக் கொள்வனவுகாரரை அல்லது எவரேனும் ஆளை நியமிப்பதன் மூலம், உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்;

(iii) நட்டஈட்டு அளவுத்தொகை, ஆதனம் வியாபாரமாகவோ அல்லது வதிவிடவளவாகவோ இருக்குமிடத்து ஐந்து வருட வாடகைக்குச் சமமானதாக

இருத்தல் வேண்டும் என்பதுடன் மற்றைய ஆதனத்தின் விடயத்தில் நட்ட ஈடுவழக்கில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீதிமன்றம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய தொகையாக இருத்தலும் வேண்டும்.

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 287 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றுக 62 ஊ என்னும் பிரிவின்கீழான கட்டளை.

62ஊ. அறுபத்திரண்டு ஊ என்னும் பிரிவின் கீழான ஒவ்வொரு கட்டளையும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 287 ஆம் பிரிவின் கீழ் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளை ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் 62எ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் 288 ஆம் பிரிவின் கீழ் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளை ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் கட்டளை ஆக்கப்பட்டதான அதே முறையில் வலுவுக்கிடவும்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணை அதன் முடிவில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"படிவம் 6

காணியில் குடியிருப்பதற்கான உரிமை தொடர்பாக ஆவணத்தைப் பதிவுசெய்வதற்கானதொரு விண்ணப்பம்

காணிப் பதிவாளருக்கு.........................................

'ஆ' இன் கீழ் கொடுக்கப்பட்ட விபரங்களுடைய உடன்படிக்கையின் காரணமாக, காணியில் இருப்பாட்சி கொள்வதற்கான எனது உரிமையை 'அ' இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பக்கங்களில் பதிவுசெய்வதற்கு அல்லது தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு ............... ஈட்டுச் சட்டத்தின் ......... ஆம் பிரிவின்கீழ் ................................ (முழுப்பெயர் மற்றும் விலாசம்) ஆகிய நான் விண்ணப்பிக்கின்றேன்.

(அ) தொகுதி :
பக்கம் :
தொகுதி :
பக்கம் :

(ஆ) அதன் சொந்தக்காரர் ................................. ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்டு........................திகதியிடப்பட்ட உறுதி அல்லது ஆவணத்தின் காரணமாக அல்லது சொந்தக்காரருடன் வாய் மூலமான வாடகை உடன்படிக்கையின் காரணமாக இருப்பாட்சி கொள்வதற்கான எனது உரிமை.

பதிவுக் கட்டணம் ரூபா .............. முத்திரைக் கட்டணமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் அல்லது *முகவரின்
கையொப்பம்."

*முகவர் என்பது விண்ணப்பதாரரினால் எழுத்து மூலமாக அனுமதியளிக்கப்பட்ட முகவர் என்று பொருளாகும்

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.